**சார்பு நீதிமன்ற சீர்காழி.**

OS. 83/2025

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ம் நாள் புதன் கிழமை PW1-இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 17.09.2025 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | பாலமுருகன் (PW1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | வயது : | |

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபணபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபணபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1) 15.03.1999-ம் தேதியிட்ட என் தந்தை பெயரில் உள்ள கிரய சாசனம் பதிவிறக்க நகல் வா.சா.ஆ. 1 ஆகவும்
2) 02.04.2024- தாவா சொத்திற்கு என் தந்தை பெயரில் உள்ள கூட்டு பட்டா இணையவழி சான்று நகல் வா.சா.ஆ.2 ஆகவும்
3) 03.03.2006 ம் தேதியிட்ட தாவா புல எண் ஒரு பகுதி சொத்தை என் தந்தை விற்பனை செய்த ஆவணம் இணையவழி சான்று நகல் வா.சா.ஆ.3 ஆகவும்
4) 02.04.2024- தாவா புல எண். வில்லங்கச்சான்று இணையவழி சான்று நகல்வா.சா.ஆ.4 ஆகவும்
5) என் தந்தை பெயரில் உள்ள ஓட்டு வீட்டுவரி ரசீது ( எண்ணிக்கை 2) வா.சா.ஆ. 5 ஆகவும்
6) 08.03.2007-ம் தேதியிட்ட என் தந்தை தாவா சொத்தை பொருத்து எனக்கு எழுதிய உயில் அசல் வா.சா.ஆ. 6 ஆகவும்
7) 23.12.2022-ம் தேதியிட்டஎ ன் தந்தையின் இறப்பு சான்று வா.சா.ஆ. 7 ஆகவும்
8) 18.10.2021-ம் தேதியிட்ட கட்டடி உரிமம் தொடர்பான பல்வரை ரசீது வா.சா.ஆ. 8 ஆகவும்

9) 08.03.2024-ம் தேதியிட்ட என் பெயரிலான சொத்து வரி ரசீது வா.சா.ஆ. 9 ஆகவும்

10) 08.03.2025- என் பெயரிலான மின் கட்டண ரசீதுவா.சா.ஆ. 10 ஆகவும்

11) என் ஆதார் ஒப்பீட்டு நகல் வா.சா.ஆ. 11 ஆகவும்

குறியீடுசெய்யப்படுகிறது. தாவாபடி தீர்வாக வேண்டுகிறேன்.

**சார்பு நீதிமன்ற சீர்காழி.**

OS. 83/2025

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ம் நாள் புதன் கிழமை PW2-இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 17.09.2025 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | செல்லதுரை (PW2) | தாலுக்கா: | |
| கிராமம்: | | வயது : | |

**<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 2 வது சாட்சி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபணபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபணபிரமாண வாக்கு மூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

வா.சா.ஆ. 6 ல் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அது வா.சா.ஆ. 12 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.